ST.MARY'S TAMIL MAHA VIDYALAYAM

சப்பிரகமுவ மாகாண கல்வித் திணைக்களம் - கற்றல் செயற்பாடு

கே/தெஹி/புனித மரியாள் த.ம.வி – எட்டியாந்தோட்டை

| தமிழ் மொழியும் இலக்கியமும் | தரம் - 10 |
|---|---|

மிகச் சரியான விடையின கீழ் கோடிடுக.

1) **"வண்டோ கானத்திடையிருந்து வந்து கமல மதுவுண்ணும்"** இதில் கானம் என்பது.
   i. மேடு  ii. காடு  iii. மலை  iv. நகர்

2) **"வானரங்கள் கனி கொடுத்து மந்தியோடு கொஞ்சும்"** இதில் மந்தி என்பது.
   i. குரங்கு  ii. பெண்குரங்கு  iii. ஆண்குரங்கு  iv. மரம்

3) **"இந்தப் பைல் இங்கு எப்படி வந்தது ?"** பைல் என்பதன் தமிழ்ப்பதம்.
   i. ஆவணம்  ii. கோப்பு  iii. எழுத்து  iv. பந்தி

4) யானையின் இளமைப் பெயர்
   i. போதகம்  ii. பிள்ளை  iii. குருளை  iv. பறள்

5) அறுபதாவது ஆண்டில் எடுக்கப்படும் விழா.
   i. வெள்ளிவிழா  ii. பொன்விழா  iii. மணிவிழா  iv. தகரவிழா

6) **"விழித்தாமரை"** இதில் வந்த அணி.
   i. உவமை  ii. உயர்வுநவிற்சி  iii. தற்குறிப்பேற்றம்  iv. உருவகம்

7) முற்று வினைக்கு ஓர் எடுத்துக்காட்டு.
   i. வந்த  ii. தருக  iii. ஓடிய  iv. பாய்ந்த

8) தெரிநிலை வினைமுற்றுக் குறிக்கும் சொல்.
   i. செல்  ii. படித்தான்  iii. நடந்து  iv. ஆடி

9) அறிவுரை கூறியும் தண்டித்தும் எவரையும் திருத்துதல் இயலாதது என்னும் பொருளை விளக்கும் பழமொழி.
   i. செடியில் மங்காததா மரத்தில் மங்கும்.
   ii. கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?
   iii. செருப்பால் அடித்தாலும் திருட்டுக் கை நிற்காது
   iv. தானே கனியாத பழத்தை தடி கொண்டு அடித்தால் கனியுமா?

10) பொருத்தமற்ற உதாரணம் இடம் பெற்ற தொகுதியை தெரிவு செய்க.
   i. பெயர்ச்சொல் - மல்லிகை,வந்தவன்,மலை
   ii. வினைச்சொல் - வந்தது,ஏறினேன்,போனவள்
   iii. இடைச்சொல் - சொல்,ஆம்,தான்
   iv. உரிச்சொல் - சால,கூர்,கழி

ஆசிரியை : பெ.தேவிகா

சுருக்கமாக விடை தருக.

1) இயல்பு புணர்ச்சிக்கு 2 உதாரணம் எழுதுக.

2) 80 வது ஆண்டு நிறைவில் கொண்டாடப்படும் விழா எது?

3) பெயர்ச் சொல்லின் பண்புகள் 3 தருக.

4) **வயிறு கழுவுதல், வயிறு கடித்தல்** என்ற மரபுத்தொடரின் பொருளை எழுதுக.

5) **சமுகம், சமூகம்** ஆகிய சொற்களை வைத்து பொருள் விளங்க வாக்கியம் எழுதுக.

6) **குசினி, துருப்பு** என்பன எந்த மொழிச் சொற்கள் ஆகும்.

7) செயற்படுபொருள் வேற்றுமையின் உருபு, பொருள் என்பவற்றை எழுதுக.

8) **License** என்பதை குறிக்கும் தமிழ்ச்சொல் யாது?

9) **சுவை,ஒளி,ஊறு,ஓசை,நாற்றம்,** என்பவற்றை குறிக்கும் தொகை பெயரைக் குறிப்பிடுக.

10) வயலும் வயல் சார்ந்த இடமும் எவ்வாறு அழைக்கப்படும்.

11) இணைப்பிடைச்சொற்கள் 3 தருக.

12) உயிர் மெய் குறில் எழுத்துக்கள் எத்தனை?

13) முதலெழுத்துக்களின் எண்ணிகை யாது?

14) **"வாழையடி வாழையாக"** என்ற தொடரை வைத்து வாக்கியம் எழுதுக.

15) சிலேடை என்றால் என்ன?

16) இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் என்பவற்றுக்கு இவ்விரண்டு உதாரணம் எழுதுக.

17) துண்டுப்பிரசுர வகைகள் 2 தருக.

18) விளம்பரத்தின் நோக்கம் யாது?

19) குமரன் கட்டுரை எழுதினான் - செயற்பாட்டு வினை வாக்கியமாக மாற்றி எழுதுக.

20) கட்டுரை ஒன்றின் பிரதான பகுதிகளை எழுதுக.

தெஹியோவிட்ட கல்வி வலயத்தின் விடுமுறைக்கால
கற்றல் செயற்பாடு

கே/தெஹி/புனித மரியாள் த.ம.வி – எட்டியாந்தோட்டை

| | |
|---|---|
| தமிழ் மொழியும் இலக்கியமும் | தரம் - 10 |

1) நீதிப்பாடல் என்றால் என்ன?

2) நீதிப்பாடல்களின் சிறப்பியல்புகள் 2 தருக.

3) நீதி நூல்கள் 5 எழுதுக.

4) **"திரி"** என்பதன் கருத்து யாது?

5) உடலுக்கு நன்மை அளிக்கும் மூன்றும் எவை?

6) நாவலர் எழுந்தார் - கட்டுரையை எழுதியவர் யார்?

7) மாபெரும் கூட்டம் நடைபெற்ற இடம் எது? நடைபெற்ற ஆண்டு எது?

8) மாபெரும் கூட்டம் நடைபெற்றமைக்கான காரணம் யாது?

9) **"பிரசண்ட மாருதத்திற்கு பிறகு"** என்ற தொடரின் பொருளை எழுதுக.

10) ஆறுமுகநாவலரால் சேர்.பொன்.இராமனாதனுக்குக் கிடைத்த பதவி யாது?

11) பாரதியார் பாடல்களின் சிறப்புகள் 2 தருக.

12) **"மணி நித்திலப் புன்னகை சுடர் வீசிட"** அணியை இனங்கண்டு விளக்குக.

13) பாரதியாரின் **"சுயசரிதை"** என்ற என்ற கவிதை தொகுப்பு உணர்த்தும் விழுமியக்கருத்துக்கள் 3 தருக.

14) சுதந்திர நற்பயிர் என்பது என்ன அணியாகும்?

15) பங்க பழனத்துப்பாடல் எம்மன்னனை விளித்துப் பாடப்பட்டுள்ளது?

16) குலோத்துங்க சோழனின் விரச் சிறப்புக்கள்

17) பங்கப் பழனத்து என்ற பாடலில் வருகின்ற மூன்று பிறைகளும் எவை? அவற்றின் பொருள்களை முறையே எழுதுக.

18) காளமேகப் புலவரின் இயற்பெயர் என்ன?

ஆசிரியை : பெ.தேவிகா

19) ஆடிக்குடத்தடையும் என்ற பாடலில் கூறப்பட்டுள்ள பாம்பிற்கும் எள்ளுக்கும் இடையேயுள்ள ஒப்புமையை கூறுக.

20) கம்பியூட்டர் சிறுகதையின் ஆசிரியர் யார் ?

21) **அட்ச இருதயகலை** என்றால் என்ன?

22) **“கம்பியூட்டர் இந்தக் கூட்டலை தப்புத் தப்பாய் போட்டிருக்கு, இதை ஒருக்காப் பார்”** இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?

23) **குறவஞ்சி** என்பதன் பொருள் யாது?

24) ஏழுவகைப் பெண்களும் யாவர்?

25) திரிகூட மலையில் எழுந்தருளியிருக்கும் இறைவனின் பெயர் என்ன?

26) நாட்டார் பாடல்களின் மறுப்பெயர்கள் 3 தருக.

27) **ஏர்ப்பாடல்** எப்போது பாடப்படும்?

28) நாட்டார் பாடல் வகைகள் 3 தருக.

29) கம்பராமாயணத்தை இயற்றியவர் யார்?

30) வடமொழியில் இராமாயணத்தைப் பாடியவர்களைக் குறிப்பிடுக.

இலக்கியப்பகுதி

ஆசிரியை : பெ.தேவிகா